DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC. 65 of 2016

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 3

Name : திரு. துரைசாமி

Age : 39

Father's/Husband's Name : சுப்புராயன்

Village : வடமலைப்பாளையம்

Taluk : பல்லடம்

Occupation : கம்பெனி மேலாளர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of January 2021

முதல் விசாரணை: நாள்.20.01.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு பனியன் கம்பெனியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னுடைய நண்பர் ஜெயக்குமார் வீட்டில் திருடுபோனது சம்பந்தமாக தேதி, மாதம் ஞாபகமில்லை, கடந்த 2015 ஆம் வருடம் ஒருநாள் இரவு 1.30 மணியளவில் எனக்கு போன் செய்தார். அவர் வீட்டில் தூங்கிகொண்டிருக்கும்போது யாரோ வந்து கதவை தட்டுவதுபோல் சத்தம் கேட்பதாக போன் செய்தார். நான் உடனடியாக என் வீட்டிலிருந்து அவர் வீட்டிற்கு வந்து பார்த்தேன். அவர் வீட்டின் முன் கதவு நெம்பப்பட்டிருந்தது. அவரது வீட்டிற்கு அடுத்ததாக பிரதீப் என்பவரது வீட்டிலும் கதவை உடைக்க முயற்சி செய்திருந்தார்கள். உடனடியாக நாங்கள் காவல் துறைக்கு தகவல் சொன்னோம். அடுத்த நாள் போலீசார் கைரேகை

நிபுணர்களுடன் வந்து அங்கு விசாரணை நடத்தினார்கள். அவர்கள் விசாரணை நடத்தியதற்காக என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். அந்த கையொப்பம் மட்டும் அ.சாஆ.2.,

அரசுதரப்பில் சாட்சி அரசுதரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியாக கு.வி. செய்ய அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அ.த.கு.வி.

போலீஸ் விசாரணையின்போது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்களா என்றால் ஆமாம். அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்தீர்களா என்றால் ஆமாம். தற்போது அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிதரப்பு கு.வி.

இல்லை

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்